விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com


கல்யாண மாலை
சர்வதேச திருமண சே
T.P: 021 720 1005
இல.144
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 286 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 14 சனிக்கிழமை (01.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஐ.நாவுடன் ஒத்துழைத்ததற்காக

# இலங்கையில் மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்

### ஐ.நா மனித உரிமைகளுக்கான உதவி பொதுச் செயலாளர் குற்றச்சாட்டு




*(நியூயோர்க்)*

இலங்கையில் உள்ள மக்கள் மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைத்ததற்காக பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாக ஐ.நா மனித உரிமைகளுக்கான உதவி பொதுச் செயலாளர் குற்றம் சுமத்தியுள்ளார். *(02ஆம் பக்கம் பார்க்க)*

## உயர் பாதுகாப்பு பிரதேசங்கள் பிரகடனம்

ஐ.நா அதிருப்தி



05

## எரிபொருள் விலையில் மாற்றம்

(கொழும்பு)

எரிபொருளின் விலையில் இன்றைய தினம் மாற்றம் ஏற்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மாத 02

## இலங்கையர்களின்

# வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையர்களின் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரித்துள்ளது.

இது தொடர்பான புதிய அறிக்கை வெளி 11

## வட மாகாணத்தில் எயிட்ஸ் நோயாளர்கள் அதிகரிப்பு

### அதிகரித்த போதைப் பாவனையே காரணம் எனத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் வட மாகாணத்தில் எயிட்ஸ் (AIDS) நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பாலியல் நோய் மற்றும் HIV தடுப்புப் பிரிவின் 11

# சர்வதேச சமாளிப்பே தேசிய பேரவை நாடகம்

## ஜே.வி.பி தலைவர் அநுரகுமார



(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களைச் சமாளிப்பதற்கான ரணில் விக்கிரமசிங்கவின் நாடகமே தேசிய பேரவையாகும். அரசியல் நோக்கம் கொண்ட அந்தப் பேரவை பயனற்றதாகும்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஒடுக்கப்படுகின்றனர். அவர்கள் மீது தாக்குதல் 11

## நீங்கள் தோற்கவில்லை; மீண்டெழுவீர்கள்

### மகிந்த, கோட்டாவிடம் நேரில் தெரிவித்தார் சுப்பிரமணியன் சுவாமி



(கொழும்பு)

நீங்கள் தோற்கவில்லை நீங்கள் மீண்டெழுவீர்கள் என இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த 11

## வடக்கு மக்களுக்கு

# சீனாவின் செஞ்சிலுவை சங்கம் உதவி

(கொழும்பு)

சீனாவின் செஞ்சிலுவைச் சங்கம், வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான ஏழைக் குடும்பங்களுக்கு மேலும் 150,000 அமெ 11

## ஹெரோயினுடன்

# வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது இருவர் ஹெரோயினுடன் 11

## இலங்கையில் சீன ஆதிக்கம்; ஐ.நா முன்றலில் போராட்டம்



02

## அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை கவிழ்ப்போம்

### குமார வெல்கம

(கொழும்பு)

சஜித், விமல், டலஸ், அநுர ஆகிய தரப்பினரை ஒன்றிணைத்து வெகுவிரைவில் அரசாங்கத்தை கவிழ்ப்போம். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகண்டு,நாட்டுமக்களின் நன்மதிப்பை 02

## நடுவு நிலை தவறாது நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் மதுபானசாலை அமைக்க அனுமதித்ததை எதிர்த்து

## பொது மக்கள் ஆர்ப்பாட்டம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கரடிப்போக்கு சந்திக்கு அருகில் புதிதாக மதுபானசாலை ஒன்றை அமைக்க அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, குறித்த பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பகுதியில் மதுபானசாலை அமைக்கப்பட்டால், இளம் சமுதாயத்தினர் பாதிக்கப்படுவர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஐந்து தடவைகள் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், இதுவரையில் உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ம-7)

### ரூ. 17 கோடி பெறுமதியான

# தங்கத்துடன் கட்டுநாயக்காவில் நான்கு பேர் நேற்று கைது

(கொழும்பு)

17 கோடி ரூபா பெறுமைதியான 8.5 கிலோ கிராம் தங்கத்தை சட்டவிரோதமாக இலங்கைக்கு எடுத்து வந்த நான்கு விமான பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தின் வருகை தரும் முனையத்தில் சுங்க திணைக்களத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் நேற்று காலை இந்த நபர்களை கைது செய்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஓமானின் மஸ்கட் நகரில் இருந்து ஓமான் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளனர்.

இவர்களில் கொள்ளுப்பிட்டியை சேர்ந்த 25 வயதான இளம் தம்பதி மற்றும் 50 வயதான நபர் ஆகியோர் பொதிகளை எடுத்துச் செல்லும் தள்ளுவண்டியில் மிக சூட்சுமமான முறையில் மறைத்து 7.5 கிலோ கிராம் எடை கொண்ட மூன்று தங்க தகடுகளை எடுத்து வந்துள்ளனர்.

50 வயதான நபரே தங்கத்தை தள்ளு வண்டிக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்த நபர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## எரிபொருள்...

மும் இரண்டு தடவைகள் எரிபொருள் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்.

அதன்படி ஒவ்வொரு மாதமும் 1ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் எரிபொருட்களின் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையிலேயே இன்றைய தினம் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதன்படி எரிபொருள் விலை குறைய வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கையி...

ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளரின் வருடாந்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைத்ததற்காக தடுத்து வைத்தல் கட்டுப்படுத்தப்பட்ட சட்டத்தால் இலக்கு வைக்கப்படல் மற்றும் இணையங்கள் மூலம் அவர்கள் கண்காணிக்கப்பட்டனர் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அத்துமீறல்கள் அனைத்தும் 2021 மே 1ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் 30ஆம் திகதி வரையில் இடம்பெற்றுள்ளன.

இந்த செயற்பாடுகள்காரணமாக, குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளில் உள்ளவர்கள் ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைப்பதைத் தவிர்த்தனர் என்று ஐக்கிய நாடுகளின் அறிக்கை கூறியுள்ளது.

பழிவாங்கலுக்கு எதிராக உறுப்பு நாடுகளின் உறுதிமொழிகள் வழங்கப்பட்டபோதும் பொதுமக்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உதவி பொதுச் செயலாளர் இல்சே பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளுடனான ஒத்துழைப்பைத் தடுக்கும் வகையில் நீண்ட கால சிறைத்தண்டனை அல்லது வீட்டுக் காவலில் பலர் வைக்கப்பட்டுள்ளனர்.

பல நாடுகளில் தொடர்ச்சியான மற்றும் இதே போன்ற அச்சுறுத்தல் குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன.

முன்னைய ஆண்டுகளைப் போலவே பழங்குடி மக்கள் சிறுபான்மையினர் அல்லது சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை துறைகளுடன் பணிபுரிபவர்கள் அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்கல்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட பெண்களையும், பெண் மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புபவர்களின் பாதுகாப்பை, உறுதிசெய்ய தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபை பணியாற்றுவதாக பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையில் அறிக்கையை சமர்ப்பித்தபோது தெரிவித்துள்ளார். (ம-7)

## அனைவரும்...

பெற ஜனாதிபதிக்கு பெரமுனவினர் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என பாராளு மன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமாயின் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் முதலில் ஒன்றுபட வேண்டும். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, டலஸ் அழக பெரும, விமல் வீரவன்ச ஆகியோரை ஒன்றிணைத்து அரசாங்கத்தை நிச்சயம் கவிழ்ப்போம் என்றார். (ம-7)

## ஐ.நா. முன்...

இலங்கையில் சீன ஆதிக்கத்திற்கு எதிராக ஐ.நா முன்றலில் (ஜெனிவா) நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றிருந்தது.

பிரித்தானிய அரசின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக, ஜனநாயக ரீதியில் மக்களை அரசியல் வழியில் தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி, என்ற அடிப்படையில், ஈழத் தமிழர் விடுதலையை வென்றெடுப்போம் எனும் தொனிப்பொருளில் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டக்காரர்கள், "நீதி வேண்டும் - நீதிவேண்டும் எங்களுக்கு நீதி வேண்டும்" என உரத்த குரலில் தெரிவித்ததுடன், இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கொட்டெழுத்துக்களுடன் பதாதைகளும் காட்சிப்படுத்தியிருந்தனர். (ம-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 02 - 1939



இறப்பு 30 - 09 - 2022

## திருமதி மண்டலேஸ்வரி இராஜேந்திரம்

யார்வத்தை, வதிரி, நெல்லியடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மண்டலேஸ்வரி இராஜேந்திரம் அவர்கள் நேற்று (30.09.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சீனிவாசகம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராஜேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவராமசுந்தரம் அவர்களின் அன்புச் சகோதரியும் யோகேந்திரன் ( ஆசிரியர் - யா/ பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) அவர்களின் அன்புத் தாயாரும் தேவகி (ஆசிரியர் - யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி ) அவர்களின் அன்பு மாமியாரும் வேணுஷன், மதுர்சன், கவிஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-5007)

021 226 1462
077 433 4762

தகவல் :- மகன்

St John Sri Lanka

## 13 ஆவது பாடசாலைகள் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் -2022

### 18 வயதிற்கு மேற்பட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்கள் சேவைக்கு அழைப்பு

2022 ஆம் ஆண்டிற்கான பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டிகள் 30.09.2022 தொடக்கம் 04.10.2022 வரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. இப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கான முதலுதவி சேவைக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் அழைப்பு விடப்பட்டிருக்கின்றது. எனவே சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி சேவையில் சேவையாற்ற ஆர்வமுள்ளவர்கள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை சேவையாற்ற விரும்புபவர்களை குறித்த தினத்தில் பங்குபற்றும்படி மாவட்ட ஆணையாளர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆல் அழைப்பு விடப்படுகின்றது.

செ.செல்வறஞ்ஜன் O.St.J
மாவட்ட ஆணையாளர்
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்

[12952]

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆரம்ப பிரிவு ஆசிரியர் திருமதி **றாஜிகா அருளீஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## திரு. மாணிக்கம் செல்வரத்தினம்

அவர்கள் 28.09.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(12951)

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/ இணுவில் மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பாவனை தொடர்பான

# விபரங்களை வெளியிடாது மறைக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் அதிரடி

(யாழ்ப்பாணம்) —

**வடமாகாண பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனையை வெளிப்படுத்தாது மறைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.**

வடக்கு பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் மாணவர்களை பாடசாலைகளின் பெயர் கெட்டுவிடும் என்பதற்காக மறைக்கப்படுவதாக ஆளுநரின் கவனத்துக்கு தெரியப்படுத்திய நிலையில் ஆளுநர் போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் பல்வேறு அறிவுறுத்தல்களையும் உத்தரவுகளையும் வடக்கு மாகாண சுகாதார மற்றும் கல்வி அமைச்சர்களுக்கு கடிதம் மூலம் வழங்கியுள்ளார்.

குறித்த அறிவுறுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டதாவது.

மறுஅறிவித்தல் வரை ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் போதைப்பொருட்களின் பயன்பாடு தொடர்பான விபரங்களை ஆளுநரது செயலாளருக்கு இணைப்புச் செயலாளர் ஊடாக பெயர்கள் மற்றும் இருப்பிடங்கள் பற்றிய விபரங்களை வழங்க வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையும் மிகுந்த கவனத்துடன் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதோடு இரகசியத் தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

அவர்களுக்குத் தேவையான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவும் வழங்கவும் அல்லது புனர்வாழ்வு அளிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் போதைப் பொருள் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சினால் வெளிப்படுத்தப்படாத பட்சத்தில் பாடசாலை அதிபர் மற்றும் வலையக் கல்விப்பணிப்பாளர் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

2022 ஆரம்பத்திலிருந்து இற்றைவரையான காலப்பகுதியில் சிகிச்சை தேவையான பிள்ளைகள் காணப்பட்டால் அவர்களுடைய பெயர், வசிப்பிடம் முதலான விபரங்கள் 02.10.2022 அன்றுக்கு முன்பாக அறிக்கையிடப்படல் வேண்டும்.

அவ்வாறு வெளிப்படுத்தத் தவறும் பட்சத்தில் குறித்த விடயம் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்கு வருமாயின் உரிய அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் வடக்கு சுகாதார அமைச்சானது சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் ஊடாக ஒவ்வொரு மாவட்டத்திலும் போதைப்பொருட்களின் வடிவங்கள் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பாக அவதானிப்புக்களைச் செலுத்தி உறுதி செய்து விபரங்களை சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் உடன் இணைந்து பணியாற்றி ஆளுநருக்கு அட்டவணைப்படுத்த வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-104)



இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் வடமாகாணத்திற்கான சமூகப் பாதுகாப்பு தேசிய விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் சமூகப் பாதுகாப்புச் சபையின் வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பாளர் பி. பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. இச்சபையின் விருது வழங்கும் நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் முதலாம் இடத்திற்கான விருதினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் பெற்றுக் கொண்டார். (படம் : ரவிசாந்)

# நூலக நிறுவனத்தின் இணையவழி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூலக நிறுவனத்தினால் நிகழ்த்தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 54 ஆவது நிகழ்வாக "மன்னார் பிராந்திய ஆவணப்படுத்தல் - தடைகளும் தடைதாண்டல்களும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று இரவு 7.30 மணிக்கு இடம் பெறும்.


இக்கலந்துரையாடலை மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க குரு அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.

# மீசாலை வீரபத்திரர் ஆலயத்தில் வெள்ளி முடி திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை பகுதியில் உள்ள வீரபத்திரர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆலய உள் கதவினை திறந்த திருடர்கள் ஆலயத்தில் இருந்த வெள்ளியால் ஆன முடி இரண்டை திருடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றதுடன் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)



இலங்கை வான்படையினரின் புக்காரா தாக்குதலில் பலியான 20 பொதுமக்களினது 29 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானைப் படுகொலை நினைவு முற்றத்தில் இடம்பெற்றது. (படம்-சுபேசன்)

# சவுக்கு மரங்களை வெட்டி கடத்த முற்பட்ட 7 பேர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, மணற்காட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் சவுக்கு மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் இரு பெண்கள் உள்ளிட்ட 7 பேர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணற்காட்டில் சட்டவிரோதமான முறையில் சவுக்கு மரங்கள் வெட்டப்பட்டு துவிச்சக்கர வண்டிகளில் கடத்தப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு இரகசிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அப்பகுதியில் சவுக்கு மரங்களை வெட்டி துவிச்சக்கரவண்டியில் கடத்த முற்பட்ட இரண்டு பெண்கள் உள்ளிட்ட 7 பேரை கைது செய்துள்ளதுடன் அவர்களின் துவிச்சக்கரவண்டிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-33)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கொற்றை பி. கிருஷ்ணானந்தனின் சத்தியமும் சாத்தியமும் கலை இலக்கிய கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு விழாவானது இன்று மாலை 4 மணிக்கு கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலைய பொதுநோக்கு மண்டபம் தெணியான் அரங்கில் க.பரணீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலயம், (மாதா கோவில்) கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் நவராத்திரி விழாவின் கும்ப பூஜையானது கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் வருகின்ற ஐந்தாம் திகதி காலை 10.30 மணிக்கு விஜய தசமி நிகழ்வு இடம்பெறுவதுடன் மாலை 2.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். (4)

# வடக்கு ஆளுநருக்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு எதிராக மூத்த நிர்வாக அதிகாரிகளான இளங்கோவன், செந்தில் நந்தனன், சிவகுமார் ஆகியோரால் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது வடக்கில் கடமையாற்றிய குறித்த மூன்று நிர்வாகசேவை அதிகாரிகளையும் பல்வேறு குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து வடமாகாண ஆளுநர் மாகாணத்தில் இருந்து விடுவித்திருந்தார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மூன்று அதிகாரிகளும் ஆளுநர் தனது அதிகார வரம்பை மீறி செயற்படுகிறார் என ஊடகங்களில் தெரிவித்ததுடன் நீதிமன்றத்தையும் நாடியிருந்தனர்.

இந்நிலையில், இடமாற்றத்தின் நியாயப்பாடுகள் மற்றும் சட்ட வரம்பை மீறியமை தொடர்பில் முன்வைக்கக்கூடிய போதிய ஆதாரங்கள் இல்லாமையால் குறித்த வழக்கை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது-20 உலகக் கிண்ண தொடரில் இருந்து பும்ரா விலகல்



இந்திய கிரிக்கெட் அணியின் பிரதான வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ரா, காயம் காரணமாக, எதிர்வரும் இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பும்ராவுக்கு முதுகுப் பகுதி எலும்பில் லேசான விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், அடுத்த 6 மாதங்களுக்கு அவரால் களம் காணமுடியாதெனவும் பிசிசிஜ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு அறுவைச் சிகிச்சை ஏதும் தேவை இல்லை எனவும் தொடர்ந்து ஓய்வில் இருக்கும் பட்சத்தில் அந்தக் காயம் தானாகவே குணமடைந்து விடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஓய்வு மற்றும் சிகிச்சைக்காக அவர் பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் பயிற்சி நிலையத்துக்கு சென்றுள்ளார்.

பும்ரா உலகக்கிண்ணத் தொடரில் விளையாடாத பட்சத்தில், மேலதிக வீரர்களாக உள்ள தீபக் சஹார், முகமது ஷமி ஆகியோரில் ஒருவர் பிரதான அணியில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

இதனிடையே தற்போது நடைபெற்று வரும் தென்னாபிரிக்கா அணிக்கெதிரான தொடரில், பும்ராவுக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் சிராஜ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

ஏற்கனவே உபாதை காரணமாக சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா விலகியுள்ள நிலையில், தற்போது ஜஸ்பிரீத் பும்ராவின் இழப்பும் அணியை கடும் நெருக்கடிக்குள் தள்ளும் என கூறப்படுகின்றது.

பணிச்சுமை அடிப்படையில் முக்கிய வீரர்களுக்கு அவ்வப்போது ஓய்வளிக்கப்பட்டு வருவதன் அடிப்படையிலும் காயம் காரணமாகவும் நடப்பாண்டில் இதுவரை பும்ரா அணியில் அதிகமாக களம் காணவில்லை.

மொத்தமாக இந்த ஆண்டு அவர் ஐ.பி.எல் போட்டிகள் தவிர்த்து 5 டெஸ்ட், 5 ஒரு நாள் மற்றும் 5 இருபது-20 போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார்.

இதுவரை 60 சர்வதேச இருபது-20 போட்டிகளில் விளையாடி உள்ள பும்ரா, 70 விக்கெட்டுக்கள் கைப்பற்றி உள்ளார். (4)

# இங்கிலாந்து அணிக்கெதிரான 5 ஆவது இருபது-20

## பாகிஸ்தான் வெற்றி



இங்கிலாந்துக் கிரிக்கெட் அணிக்கெதிரான ஐந்தாவது இருபது-20 போட்டியில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஏழு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 3-2 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

லாகூரில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 19 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 145 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 146 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணியால், 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 139 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (4)

## facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2708

**றாயினி**

சிலரை ஏன் சந்தித்தோம் என்றும்
சிலரை ஏன்
இவ்வளவு தாமதமாக சந்திக்க
நேர்ந்தது என்றும்
தோன்றுவதே வாழ்க்கை



**சிவகுமார்**

நீங்கள்
செய்த நன்மை தீமைகளை
காலம் குறித்து வைத்துக் கொண்டு
காலமும் நேரமும் வரும் போது
அதை
திருப்பிக் கொடுக்கும்!

**சிவரஞ்சினி**

வளைந்த ஆணியை
விட்டு விடுகிறார்கள்
நேராக நிற்கும் ஆணியை தான்
அடி அடி என அடித்து
துவம்சம் செய்கிறார்கள்
அதுபோல் தான்...
உண்மையாக
இருப்பவர்களின்
நிலைமையும் இந்த உலகில்!



**டேவிட் அனோயன்**

நேரம் கடந்து செல்ல
நாம் மட்டும்
ஒரே இடத்தில் நின்று
கொண்டிருந்தால்,
வாழ்க்கையில் முன்னேற முடியாது
எனவே
கடந்த பாதையைத் திரும்பிப் பார்த்து
பெருமிதம் கொள்ளாமல்,
முன்னேற முயன்று
கொண்டே இருப்போம்

**கௌரி**

உங்கள் பேச்சை
கொண்டு தான்
அன்பு மதிக்கப்படும்,

உங்கள் அன்பை
போல தான்
நடத்தை இருக்கும்

உங்கள் நடத்தையை
போல தான்
வாழ்க்கை இருக்கும்

**அபிநயன்**

சொத்து இருக்குது
என்று
சொல்லுறத்துக்கும்
சொந்த உழைப்பு
இருக்கு என்று
சொல்லுறதுக்கும்
நிறைய வித்தியாசம்
உண்டு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் உரிமைகளை இலங்கை அரசாங்கம் மதிக்க வேண்டும்-ஐ.நா

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் பல இடங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பெயரிட்டு ஜனாதிபதி வெளியிட்டுள்ள அதி விசேட வர்த்தமானி தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரம் தொடர்பான விசேட அறிக்கையாளர் கவலை தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இலங்கை அரசாங்கம் இந்த நடவடிக்கையை பொதுக் கூட்டங்களுக்குத் தடையாக முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் உரிமைகளை இலங்கை அதிகாரிகள் மதிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் இலங்கை பாராளுமன்றம், உச்ச நீதிமன்றம், கொழும்பு - உயர் நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு, இலங்கை இராணுவத் தலைமையகம், பிரதமர் அலுவலகம், பாதுகாப்புப் படைகள், முப்படைத் தளபதிகளின் தலைமையகம், கொழும்பு மாவட்டத்தின் பல இடங்கள் மற்றும் அதனைச் சூழவுள்ள வளாகங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# முதலீட்டாளர்களிடம் இருந்து 2000 டொலர் கட்டணம் அறவீடு

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர் முதலீட்டாளர்களிடமிருந்து வருடாந்தம் இரண்டாயிரம் அமெரிக்க டொலர்களை கட்டணமாக அறவீடு செய்ய கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குவது குறித்து நிதி அமைச்சரான, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்தில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் தொடங்கும் 12 மாத கால அனுமதிப் பத்திரம் வழங்கப்பட உள்ளது.

அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பம் செய்யும் முதலீட்டாளர்களுக்கு நிபந்தனை அடிப்படையில் அனுமதி வழங்க கொழும்பு துறைமுக நகர் வர்த்தக ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அனுமதி வழங்கப்படும் முதலீட்டாளர்கள் கொழும்பு துறை முக நகர் மற்றும் அதற்கு வெளியே வர்த்தக நடவடிக்கை களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## குறைந்த பெறுபேறுகளை பெற்ற

# தேசிய விளையாட்டு வீரர்களும் பட்டப்படிப்பினை நிறைவு செய்யலாம்

## விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சையில் குறைந்தபட்ச பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட தேசிய விளையாட்டு வீரர்களும் பட்டப்படிப்பினை நிறைவு செய்ய முடியும் என விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் அமல் எதிரி சூரிய இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சையில் குறைந்த தேர்ச்சி பெறுபேற்றினை கொண்ட தேசிய விளையாட்டு வீரர்கள் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி)


ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 . 02 . 1986



ஆண்டவன் அடியில் 26 . 09 . 2017

அமரர். சிவகுமாரன் காண்டீபன்

(திதி- புரட்டாதி பூர்வபக்க ஷஷ்டி)

ஆண்டுகள் ஐந்து என்ன ஐம்பது தான் கடந்தாலும்
ஐயனே அகலாது உன் நினைவுகள்
நீங்காது உன் பிரிவின் சோகம்
எங்கள் உயிர் உள்ளவரை உன் நினைவுகள்
எம்முள் நிலைத்து இருக்கும்
உன் மறைவை மறக்க முடியாது
காலமெல்லாம் கலங்கி நிற்கும் நாங்கள்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஒருதானை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(C-5003)


# இராசிபலன்

01.10.2022
புரட்டாதி 14, சனிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.55 மணிவரை

கேட்டை பின்னிரவு 4.01 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை

சஷ்டி விரதம்
சந்திராஷ்டமம் - கார்த்திகை

வளவன்



**மேஷம்** பொறுமையாக இருந்து சாதிக்க வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கௌரவக் குறைவான நாள்.



**கடகம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



**துலாம்** உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**மகரம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பணத்தேவை கள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.



**ரிஷபம்** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.



**சிம்மம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்ய முற்படுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.



**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.



**கும்பம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.



**மிதுனம்** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.



**கன்னி** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**தனுசு** நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.



**மீனம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

சிலரிடம் நீ உதவி கேட்டால் தான் உனக்கு உதவி செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### பகைவனுக்கருள்வாய்!

(நேற்றைய தொடர்சி)

இதனால் நமக்குத் தானே நட்டம் என்று சொல்லிப் பார்த்தாள்.

ஞானதீபனோ "ஜக்கு என் எதிரி. அவனை ஒரு தடவை நம்பினேன். அதன் பலனாக என் தந்தையின் உயிரைப் பறிகொடுத்தேன். அதனால் அவனது எந்தப் பேச்சை நம்பினாலும் எனக்குப் பெரும் நட்டமே ஏற்படும்.

அவனது பேச்சை நம்பாவிட்டால் எனக்குச் சிறிய நஷ்டந்தான் ஏற்படும். அதைப் பொறுத்துக் கொள்வேன்" என்றான்.

சூரியபுரத்தில் ஞானதீபனுக்கு நல்ல பெயர் இருந்தாலும் ஜக்கு சம்மந்தப்பட்ட விடயங்களை அவன் வெறுத்துப் புறக்கணித்ததால் கொஞ்சம் கெட்ட பெயரும் ஏற்பட்டது.

சிலர் அவனிடம் "ஜக்கு உனக்கு நல்லது தானே செய்கிறான். அதை ஏற்று இலாபம் அடை" என்று சொன்னார்கள். ஞானதீபனோ அதை ஏற்கவில்லை.

இதனால் ஜக்குவின் பெயரை உபயோகித்து சிலர் ஞானதீபனிடமிருந்து ஆதாயம் அடைந்தனர். ஜக்கு சொன்னான் என்று ஞானதீபனிடம் கூறி விட்டால் அதைக் கண்டிப்பாக அவன் ஏற்க மாட்டான். எனத் தெரிந்து வியாபாரிகள் தந்திரமாக அவனிடம் பேசிக் குறைந்த விலைக்குப் பொருட்களை வாங்கிக் கொண்டு போனார்கள்.

அவன் மனைவி இதை ஞானதீபனிடம் எடுத்துக் கூறவே அவனும் "என்னை யார் யார் எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இதிலெல்லாம் எனக்குக் கிடைக்க வேண்டிய இலாபத்தில் ஒரு சிறு நட்டம் தான் ஏற்படுகிறது.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# எங்கள் சிறுவர் நூலகம்



இப்பகுதியில் பல வகையான சிறுவர் கதைகள் உள்ளன. இக் கதைப் புத்தகங்களில் எனக்கு பேராசிரியர் ஏ.சோதியின் புத்தகங்கள் மிகப் பிடிக்கும். இங்கு விஜய், ஜீனியர்ஸ், சுட்டி விகடன், கோகுலம், அர்ச்சுனா, அம்புலி மாமா, அகரம், கோகுலம் போன்ற சஞ்சிகைகளும் காணப்படுகின்றன. இவற்றில் விஜய், ஜீனியர்ஸ் எமது பாடசாலை கல்விக்கு பெரிதும் உதவி புரிகின்றன.

மேலும் கணனி வசதி காணப்படுவதால் எமது மேலதிக கல்விச் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பதுடன், எமது ஆளுமை விருத்திக்கும் பெரிதும் பயன்படுகிறது.

மேலும் சனிக்கிழமை தோறும் கதை நேரம் இடம்பெறுகின்றமையால் அன்று எமக்கு ஓரே உற்சாகம் தான். அத்தோடு வர்ணம் தீட்டுதல், பிற செயற்பாடுகள் மூலம் நாம் அன்றைய தினத்தை நூலகத்தில் சந்தோசமாக கழிக்கின்றோம்.

இயற்கையாகவே அமைந்த அமைதியான சூழலும் வர்ணமயமான தள பாடங்களும் விதம்விதமான நூல்களின் அழகான ஒழுங்கும் எம்மை நூலகத்திற்கு மீண்டும் மீண்டும் வர தூண்டுகின்றது.

## வாசிப்போம்

வண்ணப் பூவும் வாடுது
சின்னப் பூவும் வாடுது
அன்பு மட்டும் வாடாமல்
புன்னகைத்து பாடுது

அன்பினாலே வாசிப்போம்
நூல்களை நாம் நேசிப்போம்
இதயத்தாலே யோசிப்போம்
இன்பமுடன் வாசிப்போம்



ஜெ.தர்னிஸ்,
தரம் -01
நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயம்

# சிலப்பதிகாரம்

## நீதி கேட்டு நெடும் பயணம்




பாவம் அளவில்லாத வருத்தத்தில் ஏதோ பிதற்றுகிறாள் என்று தான் அவர்கள் நினைத்தார்கள். அவள்மேல் இரக்கம் கொண்ட மக்கள் கண்ணகியைக் கோவலன் உடல் அருகே அழைத்துப் போனார்கள்.

'ஐயனே! நான் உங்களைப் பார்த்தும், நீங்கள் என்னைப் பார்க்கமுடியாமல் போயிற்றே! மாலை தவழும் உங்கள் மார்பு புழுதியில் கிடக்கிறதே... இதைப் பார்த்து என் மனம் என்ன பாடுபடும் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கவில்லையா?'

'மன்னன் செய்த இந்த மாபாதகம் என்னுடைய முன்வினைப் பயனால்தான் நேர்ந்தது என்று எனக்குச் சமாதானம் சொல்ல மாட்டீர்களா? மக்களெல்லாம் பழித்துத் தூற்றுமாறு மன்னன் செய்த இந்தச் செயல் விதியின் விளைவு என்று சொல்லுங்களேன். தயவுசெய்த சொல்லுங்களேன்'

கோவலன் உடல் மீது விழுந்து புரண்டு அழுதாள் கண்ணகி. அவளுடைய உடம்பு முழுவதும் இரத்தமாயிற்று.

கடைசியாக அவள் இரத்தம் சொட்டும் உடலோடு எழுந்து நின்றாள். மீண்டும் ஆவேசமாகப் பேச ஆரம்பித்தாள்.

இந்த மாநகரில் கணவனுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பொறுத்துக்கொள்ளும் பெண்கள் இருக்கிறீர்களா? அயலாருக்குப் பிறந்த குழந்தையைக்கூட அன்பாக வளர்க்கும் சான்றோர் இருக்கிறீர்களா? குற்றம் அறியாத ஒருவனைக் கூர்வாளால் வெட்டிய பாண்டிய நாட்டில் தெய்வம் இருக்கிறதா? தெய்வம் இருக்கிறதா? உரத்த குரலில் கண்ணகி கேட்டதும் மதுரை நகரமே அதிர்ந்தது.

அங்கிருந்த எல்லோரும் வாயடைத்துப் போய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெண்களின் கண்ணில் கரகரவென்று கண்ணீர் வந்தது.

அப்போது யாரும் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது.

இறந்து கிடந்த உடம்பில் இருந்து பளிங்கு போல உருவம் கொண்ட கோவலன் எழுந்தான்.

கண்ணகியைப் பார்த்து 'அழகிய கண்ணுடைய தேவதையே, நீ இங்கே இரு' என்று சொல்லி விட்டு வானத்தில் ஏறித் தேவர்களைச் சென்றடைந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 89

தேர்தல் சட்டத்தின்படி, பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் நாடு தழுவிய மூடப்பட்ட கட்சிப் பட்டியல் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம் 5% தேர்தல் வரம்புடன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்றைய 225 உறுப்பினர்கள் தொகுதிவாரி (FPTP) முறையைப் பயன்படுத்தி ஒற்றை உறுப்பினர் தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

2014 முதல் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி உட்பட பல்வேறு அரசியல்வாதிகள் தேர்தல் முறையை 100% கட்சி-பட்டியல் விகிதாசார பிரதிநிதித்துவத்திற்கு திறந்த பட்டியல்களுடன் சீர்திருத்த முன்மொழிந்துள்ளனர். இந்த முன்மொழிவை யூலியா திமோஷென்கோ எதிர்த்தார். ஜனாதிபதியால் எழுதப்பட்ட இம் முன்மொழிவு மீதான வாக்கெடுப்பு 22 மே 2019 அன்று நடைபெறவிருந்தது. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதை நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கு எதிராக வாக்களித்ததால் தேர்தல் முறை மாற்றப்படவில்லை.

**நேட்டோ என்றால் என்ன?**

நேட்டோ என்பது வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு ஆகும். அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட் 12 நாடுகள் சேர்ந்து 1949 இல் இந்த இராணுவ கூட்டு அமைப்பை உருவாக்கின. இதில் உறுப்பினராக உள்ள எந்தவொரு நாட்டின் மீது ஆயுதத் தாக்குதல் நடந்தால், அந்த நாட்டைக் காக்க மற்ற உறுப்பு நாடுகள் ஓரணியாக சேர இணங்க வேண்டும்.

ஐரோப்பாவில் பனிப்போர் காலத்துக்குப் பிந்தைய ரஷ்ய விரிவாக்க அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நோக்கத்தையே இந்த அமைப்பு குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

1955 இல் நேட்டோ கூட்டுப்படைக்கு எதிர்வினையாற்றும் வகையில் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகள் கூட்டணியுடன் ரஷ்யா வார்சா ஒப்பந்தத்தை ஏற்படுத்தி தனியாக ராணுவ கூட்டணியை அமைத்தது.

**நேட்டோவில் உறுப்பினராக உள்ள எந்தவொரு நாடு மீது ஆயுத தாக்குதல் நடந்தால், அந்த நாட்டைக் காக்க மற்ற உறுப்பு நாடுகள் ஓரணியாக சேர இணங்க வேண்டும்.**

வார்சா ஒப்பந்தத்தின்படி இணைந்த நேச நாடுகளில் பல 1991 இல் சோவித் யூனியன் பிளவுபட்ட பிறகு ஒப்பந்தத்தில் இருந்து விலகி நேட்டோவில் உறுப்பினர்களாயின. இப்போது நேட்டோ அமைப்பில் 30 உறுப்பு நாடுகள் உள்ளன.

ரஷ்யா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லைகளில் அமைந்துள்ள முன்னாள் சோவியத் குடியரசின் அங்கமாக இருந்ததுதான் உக்ரைன். இந்த நாடு இதுவரை நேட்டோவில் உறுப்பினர் ஆகவில்லை. ஆனாலும், அது நேட்டோ நேச நாடாக விளங்கி வருகிறது. அப்படியென்றால், எதிர்காலத்தில் எப்போதாவது ஒரு கட்டத்தில் நேட்டோ அமைப்பில் உறுப்பினராக சேர உக்ரைன் அனுமதிக்கப்படலாம் என கருதலாம்.

ஆனால், அப்படியொன்று நடக்கவே கூடாது என்ற உத்தரவாதத்தை மேற்கு நாடுகள் தர வேண்டும் என்று ரஷ்யா விரும்புகிறது. எனினும், நேட்டோவுடன் உக்ரைன் நட்பு பாராட்டுவதற்கு தடை விதிக்க அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மறுத்து வருகின்றன.

தமது பாதுகாப்பு கூட்டாளிகளை சுயமாக தேர்வு செய்யும் சுதந்திரம் இறையாண்மை மிக்க நாட்டுக்கு இருக்க வேண்டும் என்று அந்த நாடுகள் கூறி வருகின்றன. மேற்கு நாடுகளின் இராணுவ கூட்டணியில் இணையும் தமது இலக்கில் "வளைந்து கொடுத்துப் போகவே" உக்ரைன் விரும்புவதாக பிரிட்டனுக்கான உக்ரைனிய தூதர் வாடிம் ப்ரிஸ்டெய்க் கூறினார்.

ஆனால் அவரது கருத்துடன் முரண்பட்ட உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியின் செய்தித் தொடர்பாளர், உக்ரைனிய அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேரும் தமது ஆர்வத்தில் தங்கள் நாடு உறுதியுடன் இருப்பதாக தெரிவித்தார்.

உக்ரைனில் ரஷ்யாவுடன் நெருங்கிய சமூக மற்றும் கலாசாரத் தொடர்புகளைக் கொண்டுள்ள மிகப் பெரிய ரஷ்ய மக்கள் தொகை உள்ளது. கேந்திர ரீதியாக இந்த வாய்ப்பை உக்ரைனுக்குள் நுழையும் பின்வாசல் வழியாகப் பார்க்கிறது ரஷ்யா. உக்ரைனியர்களும் ரஷ்யர்களும் ஒரே மக்கள் என்று கூறுகிறார் விளாடிமிர் புடின்.

மேற்கத்திய சக்திகள் ரஷ்யா மீது அத்துமீறி நுழைவதற்கு நேட்டோ அமைப்பைப் பயன்படுத்துவதாக ஜனாதிபதி புடின் கூறுகிறார். மேலும், கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ தனது இராணுவ செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

(தொடரும்...)

# ஊழல் வழக்கிலிருந்து நவாஸ் ஷெரீப் விடுதலை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் லண்டனில் வைத்திருந்த நெஸ்கோல் லிமிடெட் மற்றும் நீல்சன் எண்டர்பிறைசஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இருந்த கட்டடங்கள் சட்டவிரோதமாக கொள்வனவு செய்யப்பட்டதாக பாகிஸ்தான் தேசிய பொறுப்புடைமை பணியகம் குற்றம் சுமத்தி இருந்ததன் பேரில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அத்தோடு 2006 ஆம் ஆண்டு மரியம் நவாஸ் போலி பத்திரங்களை தயாரித்தாகவும் அவரது கணவர் கப்டன் சப்தார் அதில் கையெழுத்திட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கில் கடந்த 2018 ஆம் ஆண்டு மரியம் நவாஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததோடு, மீண்டும் தீர்ப்பினை எதிர்த்து ஒகஸ்ட் மாதம், நவாஸ் ஷெரீப் குடும்பத்தினர் மேல்முறையீடு செய்திருந்தனர்.

வழக்கின் இறுதி முடிவாகத் தற்போது குறித்த கட்டடம் சட்ட விரோதமாகக் கொள்வனவு செய்யப்பட்டது என்பது நிரூபிக்கப்படாமையால் வழக்கில் இருந்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின துணைத் தலைவர் மரியம் நவாஸ் மற்றும் அவரது கணவரை விடுதலை செய்து இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தற்போது மரியம் நவாஸ் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## ராணியின் மறைவிற்குப் பின்

# வின்ட்சர் கோட்டை பொதுமக்களுக்காக திறப்பு



(லண்டன்)

ராணி எலிசபெத்தின் மறைவிற்கு பிறகு முதல் முறையாக வின்ட்சர் கோட்டை பொது மக்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டது.

கோட்டை மற்றும் சென் ஜோர்ஜ் தேவாலயம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறக்கப்பட்டது.

ராணியின் நினைவிடத்தை பொதுமக்கள் பார்வையிடுவதும், ஜோர்ஜ் VI மெமோரியல் சேப்பலில் அவரது பெயர் பொறிக்கப்பட்ட லெட்ஜர் கல்லைப் பார்ப்பதும் இதுவே முதல் முறையாகும்.

வின்ட்சர் கோட்டைக்கான நுழைவுச் சீட்டில் தேவாலயத்திற்கான நுழைவு சேர்க்கப்பட்டுள்ளது.

வாரத்தில் பெரியவர்களுக்கு 26.50 பவுண்டுகள் மற்றும் சனிக்கிழமைகளில் 28.50 பவுண்டுகள் என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, சிறுவர்களுக்கான நுழைவுச் சீட்டுகளின் விலை வாரத்தில் 14.50 பவுண்டுகள் மற்றும் சனிக்கிழமை 15.50 பவுண்டுகள் என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (நி)

# அமெரிக்காவிற்கு எதிராக வடகொரியா ஏவுகணைத் தாக்குதல்

(பியாங்யாங்)

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தென்கொரியா பயணம் செய்து இருந்ததை எதிர்க்கும் விதமாக வடகொரியா ஏவுகணைத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகள் நாட்டின் கிழக்குப் பகுதியில் இருந்து ஏவப்பட்டதாக அறியப்பட்டுள்ளது. தென்கொரியாவிற்கு அமெரிக்கா கூட்டு போர் பயிற்சிக்காக அதன் வான்தாக்குதல் ஏவுகணைகள் மற்றும் போர் கப்பல்களையும் அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தென்கொரியாவின் ஒன்றிணைந்த இராணுவ பிரிவுகளின் தளபதி குறிப்பிடும் போது, வடகொரியாவின் இவ்வாறான நடவடிக்கைகளால் அமெரிக்காவிற்கும் தென் கொரியாவிற்கும் இடையே உள்ள தொடர்புகள் அதிகரிக்குமே தவிர அது எந்த விதத்திலும் பாதிப்படையாது எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புலனற்றோர் பயன்படுத்தும் உபகரணங்களின் விலைகள் அதிகரிப்பு

**(கொழும்பு)**

**நாட்டில் பார்வையற்றோர் பயன்படுத்தும் தட்டச்சு இயந்திரம் உள்ளிட்ட பல் உபகரணங்களின் விலை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என பார்வை யற்றோருக்கான தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பிரசன்ன விக்ரமசிங்க கவலை வெளி யிட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பார்வையற்றோர் சமூகம் பயன்படுத்தும் தட்டச்சு இயந்திரத்தின் விலை ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவிலிருந்து 3 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

பார்வையற்ற குழந்தைகள் கல்விக்காகப் பயன்படுத்தும் பலகையின் விலை சுமார் 300 ரூபாவாக இருந்த நிலையில் தற்போது 3 ஆயிரம் ரூபாவை தாண்டியுள்ளது.

அத்தோடு அவற்றுக்கு தட்டுப்பாடும் நிலவுகின்றது. விசேட தொழில்நுட்ப முறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒலிப்புத்தகங்களைக் கேட்கும் தொழில் நுட்ப சாதனத்தின் விலை 22 ஆயிரம் ரூபாவிலிருந்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி)


**இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தில் வேலைவாய்ப்பிற்கான நேர்முகத்தேர்வு நடைபெற உள்ளது.**

**மிகக்குறைந்தளவு வெற்றிடங்கள் உள்ளன.**
**அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை**

**கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.**

Branch manager
Team manager
Financial advicer

நேர்முகத்தேர்வு நடைபெறும் நாட்கள்
04.10.2022 தொடக்கம் 10.10.2022 வரை
நேரம்:-09.30 a.m-12.00 p.m (12949)

**தொடர்புகளுக்கு**
**076 196 7376, 077 711 8583**


# ஒக்டோபருக்கு பின் பாரிய மக்கள் புரட்சி

## ஹிருணிகா பிரேமச்சந்திர

(கொழும்பு)

ஒக்டோபர் மாத இறுதியின் பின்னர் நாட்டுக்குள் மிகப் பெரிய மக்கள் புரட்சி ஆரம்பமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவின் தலைவியுமான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் தலங்கமை பிரதேசத்தில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதத்திற்கு பின்னர் சுனாமியை போன்று மிகப் பெரிய மக்கள் புரட்சி நாட்டுக்குள் ஏற்படும். அதனை எந்த வர்த்தமானி அறிவித்தல் மூலமும் நிறுத்த முடியாது. ஒக்டோபர் மாதத்திற்கு பின்னர் வீதியில் இறங்க போவது மிகவும் வறிய மனிதர்கள்.

இரண்டில் ஒன்றை பார்க்கவே அவர்கள் வீதியில் இறங்குவார்கள். வீட்டில் இருக்கும் அப்பாவி பிள்ளை பசியால் அழும் போது, தந்தையால் சும்மா இருந்து விட முடியாது. அப்போது அந்த தந்தை இரண்டில் ஒன்றை பார்த்து விட வேண்டும் என்று நினைத்துக்கொண்டே வெளியில் இறங்குவார்.

அப்படி வெளியில் வரும் மக்களுடன் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு எதனை செய்தாலும் ரணில் ராஜபக்ஷவினால், மோத முடியாது. முழு அரசியல் முறைமையும் மாறும். ஆளும், எதிர்க்கட்சி என அனைவருக்கும் நாடு முற்றாக அடுத்த பக்கத்தை நோக்கி மாறும் எனவும் ஹிருணிகா பிரேமச்சந்திர மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 271/4, அராலித்துறை வீதி, வட்டாரம்-06

வலிகாமம் மேற்கு பிரதேசசபை அராலி உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் -06 அராலித்துறை வீதியிலுள்ள இல.271/4 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப் பதிவேட்டின் பிரகாரம் செல்லையா பெண் வள்ளியம்மை என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை செல்லையா சிவகுமாரன் ஆகியவர் தனது பேரனாகிய காலஞ்சென்ற வேலாயுதர் விஸ்வநாதர் மற்றும் தனது பேர்த்தியாகிய காலஞ்சென்ற விசுவநாதர் விசாலாட்சி ஆகியவர்கள் சொந்தக்காரர்களாக இருந்து குறித்த ஆதனத்தை எவ்வித இடையூறுகளோ தங்கு தடைகளோ இன்றி ஆண்டனுபவித்து ஆட்சி செய்து வந்தார்கள் என்றும், பின்னர் குறித்த ஆதனத்தை தனது தாயாரான செல்லையா பெண் வள்ளியம்மை என்பவருக்கு 1959 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதியின் மூலம் சீதனம் அளித்திருந்தார்கள் என்றும், தனது தாயாரின் பெயரில் நிறைவேற்றப்பட்ட குறித்த சீதன உறுதியானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் தொலைந்து விட்டது என்பதுடன் குறித்த உறுதியின் பிரதியினைப் பெறுவதற்காக யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் தேடுதல் தொடர்பான முயற்சிகள் செய்தபோதும் குறித்த உறுதியின் பிரதியினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் தனது தந்தையார் மற்றும் தாயார் காலஞ்சென்றதன் பிற்பாடு குறித்த ஆதனம் தாய்வழி முதுசமாக தன்னை வந்தடைந்தது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மனோகரன் தாட்சாயினி முகதாவில் 03/15.09.2021 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதி ஒன்றை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தினை நாகரத்தினம் கேசகாந்தனும் பெண் ஜெயந்தினியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மனோகரன் தாட்சாயினி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 09/16.11.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்லையா சிவகுமாரன் ஆகியவரிடம் இருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவர்களானார்கள்.

குறித்த நாகரத்தினம் கேசகாந்தனும் பெண் ஜெயந்தினியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நாகரத்தினம் கேசகாந்தனும் பெண் ஜெயந்தினியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (2002)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா:சூரி 10 செவ் 2 இல்
உயரம்:172 cm
தகைமை/தொழில்:A/L ஊடகத்துறை
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/12998

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:ரேவதி 4
கி.பா: 31 ½ சூரி 1 செவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L (லண்டன்)
எதிர்பார்ப்பு:காரைநகர் மட்டும்
தொ.இ: B/13000

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:சூரி 1 செவ் 9 இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்:Advanced Dip in Com Sci. Work- Chief Operating Officer
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11968

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : அத்தம் 2
கி.பா:13 சூரி 2 செவ் 11 இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்:Degree in Civil Engineering. Construction Company. Permanent
எதிர்பார்ப்பு :உள் நாடு ஆயின் அரச வேலை. அல்லது வெளிநாடு.
தொ.இ: B/11663

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா:30 சூரி 12 செவ் 7 இல்
உயரம்:5' 5"
தகைமை/தொழில்:BA. Development officer (Gov)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்.
தொ.இ:G/5711

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்:பூரம் 1
கி.பா:34 ½ சூரி 5 செவ் 8 இல்
உயரம் 5' 2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:சொந்தத் தொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: G/10844

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:அனுசம் 1
கி.பா: சூரி , செவ் 9 இல்
உயரம் : 165 cm
தகைமை/தொழில்:O/L சுவிஸ்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ:G/10858

பிறப்பு:1980 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 24 சூரி 2 செவ் 5 இல்
உயரம் :5' 3"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு :-நிரந்தர தொழில்
தொ.இ:G/10862

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீ ஊமையாய் இருக்கும் வரை உலகம் செவிடாய்த்தான் இருக்கும்.
> – சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுப்பிரமணியன் சுவாமியின் வருகை விபரீதத்தின் அறிகுறியா?

சுப்பிரமணியன் சுவாமி அன்று முதல் இன்றுவரை தமிழ் மக்களின் எதிரியாக இருக்கக்கூடியவர்.

விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லா தொழிக்க வேண்டுமென்பதில் மிகத் தீவிரமாக இருந்தவர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டுள்ள சுப்பிரமணியன் சுவாமி கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்வதற்கான வியூகம் அமைப்பதில் தீவிரமாகச் செயற்பட்டார்.

பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகச் சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்தபோது, அதற்கு எதிராகக் கருத்துரைத்தார்.

அதுமட்டுமல்ல ராஜபக்ஷக்களின் காலத்தில் இலங்கையுடனான சீனாவின் ஊடாட்டம் அதிகரித்தபோது, இலங்கையில் சீனாவின் நுழைவு குறித்து இந்தியா அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

ஆக, இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டாலும் பரவாயில்லை. மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு எந்த எதிர்ப்பும் இந்தியாவிடம் இருந்து ஏற்படக்கூடாது என்பதில் சுப்பிரமணியன் சுவாமி உறுதியாக இருந்தார்.

இதெல்லாம் எதற்காக? மகிந்த ராஜபக்ஷவுடன் இத்துணை உறவு சுப்பிரமணிய சுவாமிக்கு ஏற்படக் காரணம் யாது? என்ற வினாக்கள் அரசியல் விமர்சகர்களிடையே இன்னமும் உள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகள் மீது தீராத ஆத்திரம் கொண்ட சுப்பிரமணியன் சுவாமி ஈழத் தமிழ் மக்களை வஞ்சிப்பதிலும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைப்பதிலும் தீவிரமாக உள்ளார்.

தமிழ் மக்கள் மீது இத்துணை வஞ்சகத்தனம் எதற்காக என்று நினைக்கையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷவின் வீட்டில் நடந்த நவராத்திரி விழாவில் விசேட அதிதியாக சுப்பிரமணியன் சுவாமி கலந்து கொண்டுள்ளார் என்பதுதான் அதிர்ச்சித் தகவல்.

இலங்கை மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தி பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷவையும் ஜனாதிபதிப் பதவியில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷவையும் வீட்டுக்கு அனுப்பியிருக்கும் இந்த நேரத்தில், சுப்பிரமணியன் சுவாமி மகிந்த ராஜபக்ஷ தரப்பை மீண்டும் அரியாசனம் ஏற்றத் துடியாய்த் துடிப்பதற்குள் இருக்கக்கூடிய காரணங்கள் சாதாரணமானதன்று.

இவ்வாறு சுப்பிரமணியன் சுவாமி செயற்படுவது இந்தியாவுக்குக் களங்கத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது.

ஆம், மகிந்த ராஜபக்ஷவின் வீட்டில் நடந்த நவராத்திரி விழாவில் கலந்து கொண்ட சுப்பிரமணியன் சுவாமி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்குச் சென்று அவரையும் சந்தித்துள்ளார் எனும்போது ஏதோவொரு விபரீதம் இலங்கையில் நடக்கப் போகிறது என்பதை மட்டும் ஊகிக்க முடிகிறது.

எதுவாயினும் சுப்பிரமணியன் சுவாமியின் விடயத்தில் இந்தியா பாராமுகமாக இருந்தால் அது அந்த நாட்டுக்கு மிகப்பெரும் ஆபத்தை ஏற்படுத்தவே செய்யும்.

# யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

## சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

டெங்குத் தொற்றால் யாழ். மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2,548 நோயாளர்கள் உறுதிசெய்யப்பட்டதுடன் எட்டு மரணங்களும் பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதிக மரணங்களும் பதிவாகின்றன.

கோவிட்-19 தொற்று காரணமாக. மாகாணங்களிற்கிடையே ஏற்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து காரணமாக கடந்த இரண்டு வருடங்களிலும் டெங்கு நோயாளர்கள் மற்றும் பதிவாகிய மரணங்களின் எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகும்.

யாழ். மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2,548 நோயாளர்கள் உறுதிசெய்யப்பட்டதுடன் எட்டு மரணங்களும் பதிவாகியுள்ளன.

கடந்த ஐந்து வருடங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் மரணங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது.

இவ் வருடம் நடந்த மரணங்களில் பெரும்பாலானவை நோயாளர்கள் தாமதமாக வைத்திய ஆலோசனையினை நாடியதாலேயே நிகழ்ந்துள்ளன.

எனவே காய்ச்சல் போன்ற டெங்கு நோய்க்கான அறிகுறிகளுடையவர்கள் உடனடியாக தகுதி வாய்ந்த மருத்துவர் ஒருவரையோ அல்லது வைத்தியசாலைகளினையோ நாடி உரிய வைத்திய ஆலோசனையைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7.33)

## இ.போ.ச நடத்துனர் மயங்கி வீழ்ந்து படுகாயம்

(கரணவாய்)

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பஸ் வண்டியின் நடத்துனர் மயங்கி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு படுகாயம் அடைந்தவர் பொலிகண்டியிச் சேர்ந்த 55 வயதுடைய கருணாகரன் என தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை இ.போ.ச சாலைக்கு சொந்தமான பஸ் வண்டி நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலையில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போது ஏ-9 வீதியில் பளைப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கரந்தாய்குளம் பகுதியில் மாலை வேளை இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த நடத்துனர் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7,60)

## காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலை இலங்கையில்

(கொழும்பு)

இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் மணிலாவில் நேற்று நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருடனான சந்திப்பின்போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸில் உள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமை அலுவலகத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவாவை ஜனாதிபதி ரணில் நேற்று சந்தித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கைக்கு வழங்கிய நிதி உதவிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தனது நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் நாட்டிற்கும் வங்கிக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடினார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு பதிலளித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா, இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவதாக உறுதியளித்தார். (நி)

## நாட்டில் இன்றும் நாளையும் சுழற்சி முறையில் மின்வெட்டு

நாட்டில் வார இறுதியான இன்றும் நாளையும் 2 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் சுழற் சிமுறையில் மின் துண்டிப்பு மேற்கொள்ளப் படவுள்ளது.

மின்துண்டிப்பை மேற்கொள்வது தொடர்பில் மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, இன்று சனிக்கிழமை A,B,C,D, E,F,G,H,I,J,K,L,P,Q,R, S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு பகல் வேளையில் 1 மணித்தியாலமும், இரவு வேளையில் 1 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், ஞாயிற்றுக்கிழமை A,B,C,D,E,F, G,H, I,J,K,L,P,Q,R,S,T, U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு பகல் வேளையில் 1 மணித்தியாலமும், இரவு வேளையில் 1 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** அபி கட்டடம், கார்கில்ஸ் [illegible] வங்கி- வைத்தியசாலை வீதி, ரில்கோ விடுதி, பல்கலைக்கழக விடுதி- வைத்தியசாலை வீதி, யாழ்.விடுதி, யாழ். மதர் கெயாரடி, தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம், பிறவுண்ஸ், யாழ்ப்பாண நகரம், கந்தப்ப சேகரம் வீதி, முனீஸ்வரன் வீதி (செல்லா தியேட்டர் [illegible]) இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவ முகாம்-தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம்-இரணைப்பாலை, 682 தடைப்பிரிவு இராணுவ படைமுகாம் புதுக்குடியிருப்பு, 683 ஆம் பிரிவு இராணுவ முகாம்- தேராவில், ஹைட்றாமணி, 68 ஆவது பிரிவு-டயலொக்கோபுரம்-இரணைப்பாலை, தேவிபுரம், டயலொக் கோபுரம்-வள்ளிபுனம் புதுக்குடியிருப்பு, இடைக்காட்டுச்சந்தி, இனிய வாழ்வு இல்லம், இருட்டுமடு, கைவேலி (மருத்துவமனை), கோம்பாவில், குறவில், மூங்கிலாறு வடக்கு, கே.டி.கே, உணவகத்தடி, புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுக்குடியிருப்பு பொலிஸ்நிலையம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, வானவில், சுதந்திரபுரம், தேராவில், திம்பிலி, உடையார்கட்டு, உடையார்கட்டு பாடசாலையடி, வள்ளிபுனம், வெள்ளப்பள்ளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான பொருட்களை விற்ற 11 வர்த்தகர்களுக்கு அபராதம்

(குப்பிழான்)

யாழில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் கடந்த 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது 10 வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் மீட்கப்பட்டன.

நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது காலாவதியான பொருட்களை வர்த்தக நிலையங்களில் வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் வழக்கு விசாரணையின் போது 11 வர்த்தக நிலைய உரிமையாளர்களும் தமது குற்றத்தினை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிமன்றத்தில் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக மொத்தமாக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (4-18)

# புதுவைநாதம் இதழுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பொது நூலகத்தினால் ஒக்டோபர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புதுவைநாதம் இதழ் 3 சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

இச் சஞ்சிகைக்கான ஆக்கங்களை பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

வலி.கிழக்கு பிரதேசத்தை பிரதிநிதுத்துவப்படுத்தும் வகையில் கவிதை, கட்டுரை, கதை, சித்திரம் போன்ற ஆக்கங்களை புத்தூர் பிரதேசசபைக்கு நேரிலோ தபால் மூலமாகவோ ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கவும்.

அத்துடன் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், வாசகர்களுக்கு இடையிலான போட்டிகள் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றுநிருபங்கள் பிரசவத்துக்கு உட்பட்ட முன்பள்ளி பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என வலி.கிழக்கு புத்தூர் பிரதேசசபை தவிசாளர் தி.நிரோஷ் அறிவித்துள்ளார். (4)

# தங்கம் என எண்ணி பித்தளை நகைகளை திருடிச்சென்ற திருடர்கள்

## அராலியில் சம்பவம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து பித்தளை நகைகள்களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,நேற்றுக் காலை வீட்டின் உரிமையாளர் வேலைக்குச் சென்றுள்ளார். அவரது மனைவி அராலி முருகமூர்த்தி வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி வரும் நிலையில் அவரும் பணிக்குச் சென்றுள்ளார். இதைச் சந்தர்ப்பமாக பயன்படுத்திய திருடர்கள் குறித்த வீட்டிற்குச் சென்று கதவினை தள்ளி உடைத்து விட்டு உள்ளே சென்றனர். வீடு முழுவதும் சல்லடை போட்டு தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது பித்தளை நகை உள்ள பேணி அவர்களது கைகளில் சிக்கியது, தங்களது கைகளில் சிக்கியது பித்தளை நகை உள்ள பேணி என்று தெரியாத திருடர்கள் அதனை திருடிச் சென்றுள்ளனர். பாடசாலையில் பணியை முடித்து வீட்டிற்கு வந்த ஆசிரியை, வீடு உடைக்கப்பட்டு வீட்டில் உள்ள பொருட்கள் வீசப்பட்டு இருந்த நிலையில் வீட்டிற்குள் திருடர்கள் வந்து சென்றிருந்ததை அவர் உணர்ந்தார்.

இதனையடுத்து அவர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இளைய தம்பி இந்து வித்தியாலயத்தின் சிறுவர், முதியோர் தின வைபவமும் சீருடை துணி, காலணி, காலுறை உறுதிச்சீட்டு வழங்கலும் நீர் வடி தாங்கி, கழிப்பறை புனரமைத்துக் கையளித்தல் ஆகிய நிகழ்வானது எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளதுடன் பிரதம விருந்தினராக மு.இராதாகிருஸ்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (4)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகம் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையையொட்டி நடத்திய திருமுறை மனனப்போட்டியின் பரிசளிப்பு விழா நாளை 2 ஆம் திகதி பிற்பகல் 3 மணி முதல் ஆலய மண்டபத்தில் சைவ சமய அபிவிருத்திக்கழக தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம் பெறவுள்ளது.

திருமுறை மனனப்போட்டியில் தரம் 1 இல் முதலாமிடத்தினை தலையாழி ஞான வைரவர் அறிநெறிப்பாடசாலையைச் சேர்ந்த சு.லசிகாவும் இரண்டாமிடத்தினை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தை சேர்ந்த ஜெ.கிருஷ்ரிகனும் மூன்றாமிடத்தினை சென்.பீற்றஸ் கில்னர் முன்பள்ளியைச் சேர்ந்த கி.டர்சானந்தும் தரம் 2 இல் முதலாமிடத்தினை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த ச.குஹப்பிரணவியும் இரண்டாமித்தினை புனித பரியோவான் கல்லூரியை சேர்ந்த ம.நர்த்தனனும் மூன்றாமிடத்தினை அளவெட்டி அருணோதயக் கல்லூரியை சேர்ந்த சி.பருதியாவும் பெறுகின்றனர். (4)

# தகவலறியும் சட்டம் மூலம் ஊழல் இல்லாத சேவை

## யாழ்.அரசாங்க அதிபர் மகேசன்

(குப்பிழான்)

தகவலறியும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் மக்கள் தமக்கான தகவல்களைப் பெற முடிகின்றது.

இச் சட்டம் மக்களுக்கான ஒரு உரிமையாகவும் காணப்படுகிறது.

அத்துடன் தகவலறியும் சட்டம் அரச நிறுவனங்கள் வெளிப்படைத் தன்மையுடன் ஊழலில்லாது மக்களுக்கான சிறந்த சேவையை வழங்க உதவுகின்றது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

சர்வதேச தகவல் உரிமை தினத்தை முன்னிட்டு வெகுஜன ஊடக அமைச்சும் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவும் இணைந்து "தகவல் அறியும் சட்டத்தினைக் கையாளுகையில் ஊடகவியலாளர்களுக்கு உள்ள சவால்கள்" தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சர்வதேச தகவலறியும் தினத்தினை முன்னிட்டு வெகுஜன ஊடக அமைச்சும் தகவலறியும் ஆணைக்குழுவும் கிராம மக்கள் மத்தியில் தகவல் சட்டத்தினை கொண்டு செல்லும் நோக்கோடு இக்கலந்துரையாடலை மேற்கொள்வதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (4-18)

சீரடி சாயி பாபாவின் அவதார தினத்தை முன்னிட்டு ஊரெழுவில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி மண்டலி நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன் கிழமை பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

காலை 8 மணியளவில் நகர சங்கீர்த்தனத்துடன் சீரடி சாயி பாபாவால் ஆசிர்வதிக்கப்பட்ட பாதமும் புதிதாக உருவாக்கப்பட்ட ஏழு அடி உயர இராமபிரானின் திருவுருவச் சிலையும் அன்பர்கள் புடைசூழ நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட ஊரெழு பொக்கணை நீரூற்றுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 280 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 260 | 250 | 300 | 300 |
| தக்காளி | 200 | 250 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 280 | 240 |
| கோவா | 420 | 380 | 450 | 450 |
| கரட் | 350 | 360 | 400 | 440 |
| பூசணி | 200 | 150 | 160 | 180 |
| புடோல் | 220 | 200 | 200 | 160 |
| வாழைக்காய் | 200 | 160 | 150 | 150 |
| சின்னவெங்காயம் | 350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 700 | 700 | 700 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 240 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 240 |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 250 |
| லீக்ஸ் | 320 | 300 | 260 | 300 |
| பீற்றூட் | 280 | 250 | 200 | 320 |
| கறிமிளகாய் | 800 | 650 | 600 | 550 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 350 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 400 | 360 |
| முள்ளங்கி | 120 | 180 | 160 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 70 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 150 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவின்...

ரிக்க டொலர் பெறுமதியான உணவுப் பொதிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது. (ம-7)

## வவுனியாவில்...

கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை வவுனியாவில் பல வேறுபட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது தோணிக்கல், கோயில்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளிலே ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

தோணிக்கல் பகுதியிலிருந்து 219 மில்லி கிராம் ஹெரோயினும், கோயில்குளம் பகுதியிலிருந்து 129 மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

ஹெரோயினை வைத்திருந்த 51, 44 வயதுடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## சர்வதேச சமாளி...

நடத்தப்படுகின்றது.

மறுபுறத்தில் தனக்குத் தேவையான அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்ச்சி நிரலை அரசு முன்னெடுத்து வருகின்றது. இந்நிலையில், தேசிய பேரவை எதற்கு? பெயரளவில் மட்டுமே அது இருக்கப் போகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. தற்போதைய அரசும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றன.

எனவே, சர்வதேச மட்டத்தில் எழும் அழுத்தங்களை சமாளிப்பதற்காகவே ஆளுங்கட்சி தேசிய பேரவையைப் பயன்படுத்த முயற்சிக்கின்றது" என்றார். (ம-7)

## வாழ்க்கைச்...

யாகியுள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் தரவுகளின்படி செப்ரெம்பர் மாத பணவீக்கம் 69.8 வீதமாக ஆக உயர்ந்துள்ளது. ஒகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 64.3 வீதமாக பதிவானது.

இந்தநிலையில் ஒகஸ்ட் மாதத்தைக்காட்டிலும் செப்ரெம்பர் மாதத்தில் பணவீக்கம் 5.5 வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதேவேளை உணவுப் பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 93.7 வீதமாக இருந்த நிலையில் செப்ரெம்பரில் அது 94.9 வீதமாக உயர்ந்துள்ளது.

உணவில்லாப் பொருட்களின் பணவீக்கம், 50.2 வீதத்தில் இருந்து 57.6 வீதமாக உயர்ந்துள்ளது. மதுபானம் மற்றும் புகைப்பொருட்களின் பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 35.6 வீதமாக இருந்த நிலையில், செப்ரெம்பர் மாதத்தில் 39.4 வீதமாக உயர்வடைந்துள்ளது.

ஆடை மற்றும் காலணிகளின் பணவீக்கம் 56.07 இலிருந்து 66 வீதமாக அதிகரித்துள்ளது.

நீர் மின்சாரம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் பணவீக்கம் 21.8 வீதத்திலிருந்து 31.2 வீதமாக அதிகரித்துள்ளது. சுகாதாரம் தொடர்பிலான பணவீக்கம் 26.4 இலிருந்து 30.7 வீதமாக அதிகரித்துள்ளது.

போக்குவரத்து பணவீக்கம் 148.6 இலிலிருந்து 150.4 வீதமாக உயர்வடைந் துள்ளது.

தொலைத்தொடர்புக்கான பணவீக்கம் 7.3 இலிருந்து 23.5 வீதமாக உயர்வடைந்துள்ளது. கல்விக்கான பணவீக்கம் 24 இலிலிருந்து 27.9 வீதமாக உயர்வடைந்துள்ளது.

விருந்தகங்கள் தொடர்பான பணவீக்கம் 87.8 இலிருந்து 96.6 வீதமாக அதிகரித்துள்ளது. ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் 59.2 இலிருந்து 72.8 வீதமாக உயர்வடைந்துள்ளது.

வீட்டு பராமரிப்பு தொடர்பான பணவீக்கம் 56.8 இலிருந்து 65.8 வீதமாக அதிகரித்துள்ளது.

கலாசாரம் தொடர்பான பணவீக்கம் 44 இலிருந்து 52.4 வீதமாக அதிகரித்துள்ளது.

நாட்டில் பணவீக்க அதிகரிப்பானது மேலும் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிப்பையே எடுத்து காட்டுகிறது.

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை தற்போது முழுமடங்காக அதிகரித்துள்ள நிலையில், மேலும் விலை அதிகரித்தால் மக்களுக்கு கிடைக்கின்ற வருமானம் அதனை ஈடு செய்யாது எனவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பணவீக்கம் அதிகரித்தமையினால் டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியும் குறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உலக சந்தையில் எரிபொருள், எரிவாயு, பால்மா, கோதுமை மற்றும் தங்கம் ஆகியனவற்றிற்கான விலை குறைந்தாலும், இலங்கையில் அவை அதிகரிப்பதற்கான சாத்தியங்களே உள்ளன. (ம-7)

## நீங்கள் தோற்க...

ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரிடம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரிப் பூஜை சிறப்பு வழிபாடு கடந்த புதன்கிழமை இரவு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சிறப்பு வழிபாட்டில், இந்திய அமைச்சரவை முன்னாள் அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வின் பின்னர் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன் சிநேகிதபூர்வ பேச்சு நடத்தியபோதே சுப்பிரமணியன் சுவாமி குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் ஆணை பெற்று ஆட்சியில் வீறுகொண்டு நடந்த ராஜபக்ஷக்கள் ஏன் திடீரெனப் பதவிகளைத் துறந்தார்கள் என்பது இன்னமும்மர்மமாகவே உள்ளது.

அதற்கான பதிலை உங்களிடம் (மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ) நான் கேட்க விரும்பவில்லை. ஆனால், நீங்கள் தோற்கவில்லை; நீங்கள் மீண்டெழுவீர்கள். இது உறுதி என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வட...

விசேட வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் குறிப்பிட்டார்.

அதிகரித்த போதைப்பொருள் பாவனையும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்களில் ஒன்றென வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, மன்னார் மாவட்டத்தில் இது வரையில் 11 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், நோயாளிகளுக்கான மருந்துகளை பெற்றுக்கொள்வதிலும் பல சவால்கள் நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் நெருக்கடியினால், உரிய மருந்துகளுக்கு பதிலாக மாற்று மருந்துகளை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், நோய் தொடர்பிலான முழுமையான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு போதிய போக்குவரத்து வசதிகள் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், உலக பெருந்தொற்றாகக் காணப்படும் HIV தொற்றை ஒழிப்பதற்கான திட்டங்களை உலகத் தலைவர்கள் முழுமையாக முன்னெடுக்கும் பட்சத்தில், 2030ஆம் ஆண்டில் எயிட்ஸை முழுமையாக ஒழிக்க முடியும் என ஐக்கிய நாடுகளின் இணைந்த திட்டம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

தன நிதானய
திகதி - 2022.09.30
சீட்டிழுப்பு இலக்கம் - 924
B 48 53 61 64

மஹஜன சம்பத
திகதி 2022/09/30
சீட்டிழுப்பு இலக்கம் 4894
C 0 6 9 9 2 5

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.09.30
சீட்டிழுப்பு இலக்கம் 203
சிம்மம் 23 31 58 59 சிம்மம்

மெகா பவர்
திகதி 30/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1242
Z 14 06 08 43 63

கொவிசெத
திகதி 2022.09.30
சீட்டிழுப்பு இலக்கம் 3136
M 11 17 29 30
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1349
விருச்சிகம் 2 4 8 5 6 1

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1869
சீட்டிழுப்பு திகதி 2022.09.30
நிறம் இளஞ்சிவப்பு
தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,507,720/-
P 03 22 48 52

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.09.30
சீட்டிழுப்பு இல : 4030
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 3,636,240/-
15 37 38 68 X

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 229
சீட்டிழுப்பு திகதி 2022.09.30
வெள்ளிக்கிழமை
04 11 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,255,360/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,339,658/-
திகதி 2022-09-30
வெற்றி வாரம் 3581
வர்ணம் நீலம்
கன்னி
12 43 47 56
ரூ. 8,258,760/-

26 கோடி
I 14 06 23 41 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 266,030,831.80
1045
2022.09.30
வெள்ளிக்கிழமை

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1695
சீட்டிழுப்பு திகதி : 2022.09.30
ரூ. 3,688,180/-
11 15 50 61 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில வகுப்பு

ஆண்டு 2 தொடக்கம் G.C.E (O/L), G.C.E (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு

**076 119 9298**

**M.Rajan**

(12888)



# கணித பாட ஆசிரியர் தேவை

தரம் 6-11 வரையான வகுப்புகளுக்கு கற்பிக்கக்கூடிய புதிய கல்வி நிலையம் ஒன்றுக்காக ஆசிரியர் தேவை.

இடம் - தெல்லிப்பளை

(12935)

**077 834 3666**


# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கை இடைநிறுத்துங்கள்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தமக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை இடைநிறுத்துமாறு கோரி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக கொழும்பு கோட்டை நீதவான் மற்றும் அந்த நீதிமன்ற பதிவாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெறவுள்ளதாக தகவல் கிடைத்தும் அதனைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தேக நபராக பெயரிட்டு எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


# VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

Visa Extension

இலங்கை விசா நீடித்து தரப்படும்




(C-4921)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

**0777-068-777**



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில்**

**15 பரப்பு (நீலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடிச் சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 18 அடிப் பாதையுடன் நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- வீடுகள், திருமண மண்டபம் அமைக்க உகந்த சூழல்
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் (100,0000/-) மட்டும்
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 6 வரை

(12924)

**077 658 5999**



# Sb Travels இற்கு வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், 198 கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள Travels இற்கு Air Ticketing and System Knowledge அனுபவமுள்ள பெண்கள் வேலைக்குத் தேவை.

அல்லது Training வழங்கப்படும்.

**077 108 3481**

**021 222 8555**

sbtravels99@yahoo.com

(C-5004)



# இலவச விசா வாய்ப்பு

## அமெரிக்க லொத்தர் விசா



அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா?



(C-4921)

!!!அவசரியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

**V2 TRAVELS** 0768226244 0768226240



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 02 பரப்பு (நீலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- ❖ பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- ❖ 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்
- ❖ BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- ❖ 18 அடி பாதையுடன் நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- ❖ யாழ். நகரில் இருந்து 4 km தூரம்
- ❖ 1 பரப்பின் விலை 600,000/= ரூபாய் (ஆறு இலட்சம்)
- ❖ பார்வையிடும் நேரம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை

(12924)

**077 288 0152, 077 148 8348**



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில்**

**4 பரப்பு (நீலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12924)

தொடர்புகளுக்கு:- **077 288 0152**



# விற்பனையாளர் தேவை

எமது புடவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை நேரில் வரவும்.

**சிவகணேசன் ரெக்ஸ்**

இல. 41, பெரியகடை,

யாழ்ப்பாணம்.


(12957)



# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 17 பரப்புக் கணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- ■ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ■ நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ■ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.




**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு - ஜெயம்

தரகர் தேவையில்லை

(12953)

**077 814 7389, 077 241 7589**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org